**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 301/2019</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | சிவாஜி கணேசன் | P.W.1. |
| த/பெ. | : | மாசிலாமணி | |
| தேதி | : | 12.06.2025 | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u> –**

**1.** நான் இந்த வழக்கை பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேனா அல்லது பட்டாவின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் அனைத்து சொத்துகளுக்கும் நான்கெல்லை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. ஒருசில சொத்துக்களுக்கு மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன்.

2. நான் வழக்குரையில் தாவா சொத்துக்கள் எதற்கும் நான்கெல்லை குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 மற்றும் வாசாஆ 5 ஆன ஆவணங்களின் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கு நான்கெல்லைகள் மேற்படி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தும் நான் வழக்குரையில் நான்கெல்லைகளை குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல.

3. நான்கெல்லை குறிப்பிடாமல் நான் வழக்குரை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனதுஅண்ணன் பாலகிருஷ்ணன் PUC படித்துள்ளார் என்றால் சரிதான். அவர் மேற்படி படிப்பை 1970ம் ஆண்டு படித்தார் என்றால் வருடம் எனக்கு நினைவில் இல்லை. PUC படிப்பை தொடர்ந்து எனது அண்ணன் மேல்படிப்பு எதுவும் படிக்கவில்லை என்றால் சரிதான். PUC படித்து முடித்துவிட்டு வேலை பார்த்தாரா என்றால் இல்லை, விவசாயம் செய்தார். அவர் அவரது சொந்த நிலத்தில் தான் விவசாயம் செய்தார் என்றால் சரிதான்.

4. எனது அண்ணன் திருமணம் முடிந்த பிறகு தான் தில்லையாடி கிராமத்திற்கு சென்று வசித்து வந்தார். பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் பாலகிருஷ்ணன் அவரது திருமணத்திற்கு முன்பே தில்லையாடி கிராமத்தில் தனித்து வசித்து வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளதற்கு நான் மறுப்புரை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது அண்ணன் பாலகிருஷ்ணன் PUC

முடித்துவிட்டு காய்கறி வியாபாரம் மற்றும் பல வியாபாரங்கள் செய்து வந்தார் என்றால் சரிதான். வியாபாரம் செய்து கிடைத்த வருமானத்தை அவரது தனிப்பட்ட வருமானமாய் வைத்து செலவு செய்து வந்தார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணனுக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்த வருமானத்தை வைத்து தான் தாவா சொத்துகளை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்துகளை கூட்டு குடும்ப சொத்தின் வருவாயிலிருந்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அதனால் பாகபிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் 1987ம் வருடம் எனது அண்ணனுக்கு சொத்தினை கிரயம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 18.06.1975ம் ஆண்டு நான் கிரயம் பெற்ற சொத்தை தான் எனது அண்ணனுக்கு கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். 1975 ம் ஆண்டு நான் கிரயம் பெற்ற சொத்து எனது தனிப்பட்ட சொத்தா என்றால் எனது அம்மாவை கார்டியனாக வைத்து எனது பெயரில் வாங்கிய சொத்தாகும். அந்த கிரய பத்திரம் யாரிடம் உள்ளது என்றால் தெரியவில்லை. நான் எனது அண்ணனுக்கு 1987ம் ஆண்டு கிரயம் செய்து கொடுத்தபோது எந்த பத்திரத்தை காண்பித்து கிரயம் செய்து கொடுத்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் எனது குடும்ப பராமரிப்பிற்காக கிரயம செய்து கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நான் தனிப்பட்ட முறையில் சம்பாதித்து சொத்துகளை கிரயம் வாஙகியது போல் எனது அண்ணனும் சொத்துகளை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளை தவிர கோவில் சொத்துகளும் உள்ளதா என்றால் உள்ளது. கோவில் சொத்து 3ஏக்கர் உள்ளது. கோவில் சொத்துகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். பூர்வீக சொத்துகளையும், கோவில் சொத்துகளையும் சேர்க்காமல் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

7. விடுபட்டுள்ள சொத்துகளில் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள சொத்துகளும் உள்ளது என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள தனிப்பட்ட சொத்துகளின் மீது அவர் தனிப்பட்ட கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியதற்கு நானும் எனது அப்பாவும் எந்த ஆட்சேபனையும் இல்லை என கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் எந்த கையொப்பமும் செய்யவில்லை. எனது அண்ணன் பாலகிருஷ்ணன் அவரது

தனிப்பட்ட சொத்துகளை அடமானம் வைத்து தான் டிராக்டர் வாங்கினார் என்றால் சரியல்ல. அனைத்து சொத்துகளையும் அடமானம் வைத்து தான் வாங்கினார்.

8. பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள சொத்துகளை தவிர வேறு யார் யார் பெயரில் உள்ள எவ்வளவு சொத்துகளை அடமானம் வைத்துள்ளார் என்றால் எனது அப்பா பெயரில் 3 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த 3 ஏக்கர் நிலம் திருக்கடையூர் சிங்கானோடை கிராமம், சர்வே எண்கள் 508, 507, 502 ல் உள்ளது. மேற்படி சர்வே எண்கள் பாலகிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல.

9. தாவா சொத்துகள் எனது பூர்வீக சொத்துகள் இல்லை என்றாலும் எனது உடல் உழைப்பினை கொண்டு வாங்கபடவில்லை என்றாலும் பாலகிருஷ்ணனின் தனிப்பட்ட சொத்து என்பதால் நான் கோரிய பாகபிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.